**விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் - 2024**

-----------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தகிதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(3) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

**1.2 மறுப்பு அபிப்பிரயாத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு என்னால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மறுப்பு அபிப்பிராயம் வெளியிடப்படுகின்றது.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் நிதியத்தை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப்பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள்,

புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்களுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 88 ஆம் பந்திக்கு முரணாக மீளாய்வாண்டின் போது விவசாயிகளிடமிருந்து கிடைத்த தவணைப் பண வருமானம், விவசாய ஓய்வூதியக்காரர்களின் பங்களிப்பு வருமானம் மற்றும் முதலீட்டு வட்டி என்பவைகள் உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 143,566,887 பணம் காலப்பகுதிக்கான வருமானமாக கணக்கீடு செய்யப்படாது திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கப்பட்டிருந்ததனால் அத்தொகையால் இலாபம் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | பங்களிப்பாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற தவணைப் பணம் 60 வயது பூர்த்தியடையும் போது பிரதிபலனாக செலுத்த வேண்டியதனால் அறவிடப்பட்ட தவணைப் பணத்தினதும் அது தொடர்பான வட்டியினதும் மொத்தம் சபையின் நிதியக் கணக்கிற்கு செம்மையாக்கி அதன் மூலம் எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய பொறுப்புக்களுக்காக நிதியத்தினை வலுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. காப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொண்டதன் பின்னர் விவசாயிகளின் பொறுப்பினை உறுதியாக அடையாளங்கண்டு அதில் ஏதாவது பணம் மிகுதியாக இருப்பின் அப்பணத்தை ஒரு வருமானமாக அடையாளங்காண்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தவணைப் பண வருமானத்தையையும் முதலீட்டு வட்டியையும் வருமானமாக அடையாளம் காண வேண்டும். |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 04 ஆம் பந்தியின் பிரகாரம் பங்களிப்பாளர்களிடமிருந்து கிடைத்த ரூபா 135,443,031 தவணைப் பண வருமானத்தை செற்பாட்டு வருமானமாக அடையாளம் காணாமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல் | விவசாயிகள் செலுத்துகின்ற தவணைப் பணம் சபையினால் மீண்டும் விவசாயிகளுக்கு பிரதிபலனாக செலுத்த வேண்டும் என்பதனால் அத்தவணைப் பணத்தை பெற்றுக்கொள்ளலானது சபையின் செயற்பாட்டு வருமானமாக அடையாளங்காணப்படவில்லை. தவணைப் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட முதலீட்டுப் பெறுமதியானது நிதிச் செயற்பாடுகளில் காட்டப்பட்டுள்ளது. இத்தவணைப் | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தவணைப் பண வருமானத்தையும் கவனத்திற்கு எடுத்து காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அத்தொகையால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 8,123,855 தொகை முதலீட்டு வருமானமாக அடையாளம் காணப்படாமையால் முதலீட்டு செயற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சல் அத்தொகையால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | பணத்தை அறவீடு செய்வதன் மூலம் கிடைத்த பணத்தை விவசாயிகளுக்கு மீண்டும் செலுத்துவதற்காக நிதி சேகரிக்கப்படுவதுடன் அது சபையின் ஒரு பொறுப்பாகும். அந்த தவணைப் பணம் மற்றும் முதலீடுகளிலிருந்து கிடைத்த பணத்தின் மூலம் உருவாகிய வட்டி வருமானம் அந்த நிதியத்திற்கு செம்மையாக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | ஆண்டிற்கான ஆரம்ப ஓய்வூதிய பெறுப்பிலிருந்து ஆண்டின் போது செலுத்திய ஓய்வூதியப் பணத்தை கழிக்கையில் கிடைக்கும் இறுதி மீதிக்கு 11 சதவீதத்தினைச் சேரத்து ஓய்வூதியப் பொறுப்பினைக் கணிக்கும் நடைமுறை திட்டத்தினால் தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க 2024 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான ஆரம்ப மீதியான ரூபா 86,898,445,376 தொகையில் விவசாயிகள் ஓய்வூதியக் கொடுப்பனவாகிய ரூபா 4,845,125,008 இனைக் கழித்து அந்த மீதிக்கு 11 சதவீதமாகிய ரூபா 9,025,865,240 இனைச் சேர்த்து இறுதி மீதியாகிய ரூபா 91,079,185,608 தொகை ஓய்வூதிய பொறுப்பாக அடையாளம் காணப்பட்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பிரிவின் பிரகாரம் காப்பீட்டு மதிப்பீடு செய்யப்படாது மேலே குறிப்பிட்ட நடைமுறையினைப பின்பற்றி கணிப்பீடு செய்யப்பட்ட ஓய்வூதியப் பொறுப்பின் சரியான தன்மை தொடர்பாக திருப்தி கொள்ள முடியாதுள்ளது. | காப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அதற்காக காப்பீட்டு மதிப்பீட்டாளர் அல்லது எந்தவொரு நிறுவனமும் முன்வரவில்லை. அதற்கிணங்க கடைசியாக மேற்கொள்ளப்பட்ட காப்பீட்டு மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு உரிய கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காப்பீட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்கள் தொடர்பாக விவசாய ஓய்வூதியக்காரர்களின் பங்களிப்பு வருமானம் முறையே ரூபா 8,970,200 மற்றும் ரூபா 8,969,200 ஆக இருந்ததுடன் அப்பெறுமதியினை விவசாய ஓய்வூதியக்காரர்களின் பங்களிப்பு வருமானக் கணக்கிற்கு செலவுவைப்பதற்குப் பதிலாக செலுத்த வேண்டிய ஓய்வூதியக் கணக்கிற்கு | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஓய்வூதியக்காரர்களின் பங்களிப்பினை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவு வைத்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 17,939,400 ஆல் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் நடைமுறைப் பொறுப்புக்கள் அத்தொகையால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | திட்டத்தின் கூட்டு ஆயுள் காப்புறுதியின் மூலம் 18 இற்கும் 54 இற்கும் இடைப்பட்ட வயதுள்ள பங்களிப்பாளர்கள் ஓய்வூதியத்தினைப் பெறுவதற்கு முன்னர் மரணமடைந்திருத்தல், முழுமையாக மற்றும் அறைகுறையாக பலவீனமடைந்திருத்தல் என்பவற்றிற்காக செலுத்த வேண்டியிருந்த பணிக்கொடை கொடுப்பனவிற்காக 2024 ஆம் ஆண்டின் போது 266,297 பங்களிப்பாளர்களுக்கு ரூபா 15,977,820 பெறுமதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 256,616 பங்களிப்பாளர்கள் செயற்பாடற்ற பங்களிப்பாளர்களாக இருந்ததுடன் அவர்களில் மரணமடைந்த எண்ணிக்கை மற்றும் உண்மையாக செயற்பாடற்ற பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை உறுதிப்படுத்தப்படாது மதிப்பீடு செய்யப்பட்டது. | விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திற்காக காப்பீட்டு மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதோடு இந்நிதியத்திற்காகவும் காப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொண்டதன் பின்னர் இப்பொறுப்பினை சரியாக அடையாளங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுட்டிக் காட்டுகிறேன். | செயற்படுகின்ற பங்களிப்பாளர்களை அடையாளங்கண்டு கூட்டு ஆயுள் காப்புறுதி தவணைப் பணத்திற்காக ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | விவசாயிகள் ஓய்வூதிய கணக்கிற்கு மேலதிகமாக உண்மையாகச் செலுத்த வேண்டியதாக அடையாளங் காணப்பட்டுள்ள ஓய்வூதியப் பொறுப்பு ரூபா 2,345,496,047 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு காப்பீட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்காததனால் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | திட்டத்திற்காக காப்பீட்டு மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கான பெறுகைக்காக கேட்பு மனுக்களைக் கோருதல் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அதற்காக எவரும் முன்வந்திருக்காததனால் அதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. திட்டத்தின் பொறுப்பினை கணிப்பீடு செய்வதற்கும் காப்பீட்டு மதிப்பீட்டு அறிக்கையினை 2025 ஆம் ஆண்டின் போது மீண்டும் பெறுகையினை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளப்பட்டு கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | காப்பீட்டு மதிப்பீட்டினைச் செய்து ஓய்வூதிய பொறுப்பினை கணிப்பீடு செய்தல் வேண்டும். |

### 1.5.3 நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திட்டத்தின் முழுச் சொத்துக்கள் ரூபா 3,062,149,691 ஆகவும் முழுப் பொறுப்புக்கள் ரூபா 94,351,635,618 ஆகவும் இருந்ததனால் சொத்துக்களை மிகைத்த | அரசாங்கத்தின் பங்களிப்பாக தொடக்க மூலதனம் ரூபா 750 மில்லியன் நிதியினை ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் சபைக்கு அது கிடைக்கவில்லை. தற்பொழுது ஓய்வூதியப் பொறுப்பு | திட்டத்தில் சொத்துக்களை மிகைக்காத வகையில் பொறுப்புக்கள் |

| | | |
|---|---|---|
| பொறுப்புக்கள் ரூபா 91,289,485,927 தொகையாகவும் முழு நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 1,125,049,320 ஆகவும் முழு நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 3,222,013,500 ஆகவும் இருந்ததனால் நடைமுறைச் சொத்துக்களை மிகைத்த நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 2,096,964,180 தொகையாகவும் ஆனதுடன் திறைசேரியின் பங்களிப்பு இல்லாது திட்டத்தினை பேண முடியாத நிலைமை காணப்படுவதனால் திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் சிக்கலுடையதாகும். | வருடாந்தம் அதிகரிப்பதுடன் திட்டத்திற்காக நிதி இல்லாமையும் தவணைப் பணத்தினை அதிகரிக்காது பல சந்தர்ப்பங்களின் போது அரசாங்க கொள்கைக்கு இணங்க பிரதிபலன்களை அதிகரித்ததன் காரணமாக மற்றும் படிப்படியாக விவசாயிகளின் பங்களிப்பு குறைவடைவதன் மூலம் இந்நிலைமை உருவாகியுள்ளதுடன் ஒவ்வொரு ஆண்டிலும் அரசாங்க பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விவசாயிகளின் ஓய்வூதியம் செலுத்தப்படுகின்றது. | பேணப்படுதல் வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| விவசாயிகளின் ஆயுள் தரவுத் தகவல்கள் நாளதுவரையாக்கப்படாமையின் காரணமாக மரணமடைந்த மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் தகமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வராத விவசாயிகளின் ஓய்வூதியம் தொடர்ச்சியாக தபால் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டின் போது விவசாயிகளினால் பொறுப்பேற்காததினால் திருப்பி அனுப்பிய ஓய்வூதியம் ரூபா 469,255,211 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அத்திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 99,247,815 ஆகும். அந்த மீதி உருவாகியுள்ள முறைமை மற்றும் ஒவ்வொரு விவசாயிகள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய தகவல் முறைமை இல்லாததனால் திட்டத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதுள்ளது. | செலுத்தாத ஓய்வூதியங்கள் தொடர்பாக அப்பங்களிப்பாளர்களின் விபரங்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கையினை சபைக்கு அனுப்புமாறு மாவட்ட கணக்காளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் தற்பொழுது மாதாந்தம் ஓய்வூதிய பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளாத பங்களிப்பாளர்களின் அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தபால் திணைக்கள கணக்காளர்களுக்குத் தெரியப்படுத்தி தாமதமின்றி உரிய அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திருப்பி அனுப்பிவைக்கப்படுகின்ற உரிமை கோரப்படாத பணம் தொடர்பாக தகவல்களை நாளதுவரையாக்கி அதற்கிணங்க தவணைப் பணம் விடுவிக்கப்படுதல் வேண்டும். |

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **(அ)** | **1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டம்** | | | |
| (i) | 6(1) ஆம் பிரிவு | 60 வயது பூர்த்தியடைகையில் ஓய்வூதியத்திற்கு தகமை பெற்றிருக்க வேண்டிய போதிலும் அந்த வயதினைப் பூர்த்தி செய்த விவசாயிகளை அடையாளங்கண்டு அவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | திட்டத்திற்கு சேர்த்துக்கொள்ளும் போது பங்களிப்பு மற்றும் பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளும் முறைமை தெரியப்படுத்தப்பட்டு தவணைப் பணம் அறவிடப்பட்டது. விவசாயிகளுக்கு சான்றிதழ் உறுதி வழங்கப்பட்டுள்ளதுடன் பிரதிபலன்களுக்கு தகமை பெறுகின்ற காலப்பகுதி அதில் காட்டப்பட்டுள்ளது. 60 வயது பூர்த்தியடைந்த விவசாயிகளுக்கு ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக தெரியப்படுத்தி கடிதங்களை அனுப்புவதற்கும் வயதினைப் பூர்த்திசெய்த விவசாயிகளுக்கு ஓய்வூதியத்தினை செலுத்துவதும் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் தற்பொழுது எடுக்கப்பட்டுள்ளன. | 60 வயதினைப் பூர்த்திசெய்த விவசாயிகளை அடையாளங்காண்பதற்கும் அவர்களுக்கு தகமையுள்ள ஓய்வூதியத்தினை தாமதமின்றி செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 12(இ) ஆம் பிரிவு | திட்டம் தொடர்பான ஆயுள் தரவுகளை உள்ளடக்கிய தகவல் முறைமை நாளதுவரையாகப் பேணப்படாமையால் தேவையான நிதி மற்றும் செயற்பாட்டு அறிக்கையை | 1987 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்திற்காக பங்களிப்பானர்கள் சேர்த்துக்கொள்ளப்படன் தொடக்கத்தில் இதற்காக ஒரு தரவு முறைமை காணப்படாததுடன் தற்பொழுது மத்தியப்படுத்தப்பட்ட ஒரு | திட்டத்தின் ஆயுள் தரவு தகவல் முறமையை நாளதுவரையாகப் பேணுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. இதனால் 528/03 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் பிரகாரம் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்துள்ள முழு விவசாயிகளின் எண்ணிக்கை 954,254 ஆக இருந்துடன் தகவல் முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ள எண்ணிக்கை 871,425 ஆகும். அதற்கிணங்க 82,829 விவசாயிகள் வித்தியாசமாக இருந்த போதிலும் அதற்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்படவில்லை. | தகவல் முறைமை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் புதிய திட்டத்தினை அமுல்ப்படுத்தும் போது விவசாயிகளின் அனைத்து தகவல்ளையும் உள்ளடக்கி ஒரு தரவு முறைமையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | 12(ஈ) ஆம் பிரிவு | திட்டம் தொடர்பாக ஆய்வு மதிப்பீடு மற்றும் மீளாய்வினை மேற்கொண்டு செயற்பாட்டு சட்ட விதிகளில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய போதிலும் உருவாக்கப்பட்ட சட்டவிதி அல்லது பிரமாணம் இல்லாது உரிமை கோரப்படாத ஓய்வூதியத்தினை மீளச் செலுத்தும் போது அரையாண்டிற்கு 3.32 சதவீத வட்டியானது தேறிய தவணைப்பணத்திற்கு மேலதிகமாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | பங்களிப்பாளர்களால் பங்களிப்பு பணத்தை முறையாக சபைக்குச் செலுத்தாத சந்தர்ப்பங்களின் போது அப்பணம் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற வட்டி வீதத்தின் கீழ் கணிப்பீடு செய்யப்பட்டு பங்களிப்பு பணத்துடன் கொடுப்பனவு செய்வதற்கான சட்ட ஏற்பாடு காணப்படுவதுடன் அதற்கிணங்க அரையாண்டிற்கு 3.32 சதவீத வட்டி வீதமானது தேறிய தவணைப்பண கொடுப்பனவின் போது வட்டி விகிதமாக கணிப்பீடு செய்யப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தேறிய தவணைப் பணத்தின் மீது வட்டியை கணிப்பீடு செய்வதற்கு சட்ட விதி உருவாக்கப்படுதல் வேண்டும். |
| (iv) | 15(1) ஆம் பிரிவு | முறைப்படியாக 05 தவணைப் பணங்களைச் செலுத்த தவறியுள்ள ஒரு பங்களிப்பாளருக்கு சான்றிதழின் கீழான பிரதிபலனை இழத்தலினை பங்களிப்பாளருக்கு தெரியப்படுத்துவதற்கு சபைக்கு அதிகாரம் இருந்தும் பிரதிபலன்களை | 05 தவணைப் பணங்களாகக் கருதப்படுவது 05 பயிர்ச்செய்கை போகங்களாகும். அதாவது இரண்டரை ஆண்டுகளாகும். இக்காலப்பகுதியின் போது கொடுப்பனவு செய்யப்படாத விவசாயிகளுக்கு தவணைப் பண கொடுபபனவுக்காக சலுகைக் காலப்பகுதி | தவணைப் பணத்தை முறைப்படியாக செலுத்தாததன் அடிப்படையில் பிரதிபலன் இழக்கப்படுதல் பங்களிப்பாளர்களுக்குத் தெரியப்படுத்தப் படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெறுபவரினால் முறைப்படியாக 05 தவணைப் பணங்களைச் செலுத்த தவறிய போதிலும் இடைக்கிடையே அல்லது 05 தவணைப் பணங்களை செலுத்தாத பிரதிபலன் பெறுனர்கம் உறுதியினை மீறியுளடளார்கள் எனக் கருதி ஓய்வூதிய பிரதிபலன் இல்லாமல் ஆக்கப்பட்டிருந்தது. | சபையினால் வழங்கப்பட்டுள்ளதுடன் அக்காலப்பகுதியின் போதும் தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களைச் செலுத்தாத விவசாயிகளின் பிரதிபலன் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. எனினும் இறுதித் தவணைப் பணக் கொடுப்பனவிற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதி வரை தவணைப் பணத்தை செலுத்தியுள்ள பங்களிப்பாளர்களுக்கு ஓய்வூதியம் இல்லாமல் ஆக்கப்படாததுடன் அப்பங்களிப்பாளர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு ஆலோசனை சபையின் சிபாரிசு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (v) | 27(1) ஆம் பிரிவு | விடயத்திற்குப் பெறுப்பான அமைச்சரின் மற்றும் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் திட்டத்தினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற கடனின் அளவு தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ளாது கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையிடமிருந்து இத்திட்டத்திற்கு ரூபா 295,230,442 கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வட்டியையும் உள்ளடக்கி முழுக்கடன் மீதி ரூபா 552,668,504 ஆகும். | விவசாயிகள் ஓய்வூதியத்தினைச் செலுத்துவதற்காக திறைசேரியிடமிருந்து பெற்ற பணம் மற்றும் நிலுவைப் பணத்திற்காக கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் விவசாய காப்புறுதி நிதியத்தின் பணத்தை ஈடுபடுத்துமாறும் பின்னர அப்பணத்தை தீர்த்துவைக்குமாறும் தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் சபை ஏனய மிகை நிதியை விவசாயிகளின் ஓய்வூதிய கொடுப்பனவிற்காக ஈடுபடுத்தியுள்ளது. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்திலிருந்து கடற்றொழில் ஓய்வூதிய திட்டத்திடமிருந்து பெற்றுக்கொள்ப்பட்ட பணம் செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் விவசாய காப்புறுதித் திட்டத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் படிப்படியாக கொடுப்பனவு செய்யப்பட்டு | விடயத்திற்குப் பொறுப்பான மற்றும் நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் திட்டத்திற்கு வழங்கப்படுகின்ற கடன் தொடர்பாக தீர்மானித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வருவதுடன் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | விவசாயிகள் ஓய்வூதிய சான்றிதழ் உறுதியின் 06 ஆம் பிரிவு | செலுத்தப்பட்டுள்ள அரையாண்டு பங்களிப்பு பணத்தின் அளவில் 75 சதவீதம் கிடைத்திருக்குமாயின் சபையினால் தீர்ானிகப்பட்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்ட ஓய்வூதியத்தினைவிட குறைந்த ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வதற்குத் தகமை இருந்தும் அப்பங்களிப்பாளர்களுக்கு ஓய்வூதியப் பிரதிபலன்கள் இல்லாமல் ஆக்கப்பட்டிருந்தது. | செலுத்தப்பட்டுள்ள அரையாண்டு பங்களிப்பு பணத்தின் அளவில் 75 சதவீத்தினை செலுத்தியுள்ள பங்களிப்பாளர்களுக்கு வழக்கம் போல விகிதாசார ஓய்வூதியம் செலுத்தப்படும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தவணைப் பணத்தை செலுத்தாத போதிலும் 75 சதவீத தவணைப் பணத்தை செலுத்தியுள்ள பங்களிப்பாளர்களுக்கு விகிதாசார அடிப்படையில் ஓய்வூதியத்தினை செலுத்துவது தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆலோசனைக் குழுவிற்குச் சமர்ப்பித்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | அரையாண்டு பங்களிப்பு பணத்தின் அளவில் 75 சதவீதத்தினைப் பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் ஓய்வூதிய பிரதிபலன்களை இல்லாமல் ஆக்காதிருத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,161,587,879 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 4,441,863,852 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 280,275,973 பற்றாக்குறையில் குறைவு அவதானிக்கப்பட்டது. இப் பற்றாக்குறையின் குறைவுக்காக ஓய்வூதியத்தினை கொடுப்பனவு செய்வதற்காக திறைசேரியிடமிருந்து பெற்ற பணம் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திட்டத்திற்கு அங்கீகரித்த அளணியினர் இல்லாததுடன் சபையின் முழு ஊழியர் சம்பளச் செலவில் மற்றும் ஏனைய நிருவாகச் செலவில் 50 சதவீதம் திட்டத்தின் செலவாக வரவு வைக்கப்பட்டிருந்தது. உரிமை கோரப்படாத ஓய்வூதியத்தினை மீளச்செலுத்தும் போது நலன்பெறுனர்களிடமிருந்து கிடைக்கின்ற அனைத்து தவணைப் | திட்டத்தினைப் பேணுவதற்காக சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளை நேரடியாக அடையாளங்காண முடியாத சந்தர்ப்பத்தில் திட்டத்திற்கிடையே அச்செலவுகளை பகிந்தளிப்பதற்காக 2018/10/15 ஆந் திகதிய 401/4 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் | அங்கீகரித்த சட்ட விதி இல்லாது தவணைப் பணத்திலிருந்து ஏனைய அறவீடுகள் செய்யாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணங்களிலிருந்தும் ரூபா 15 வீதம் நிருவாகச் செலவுகளாகவும் விவசாயிகள் முறையாகச் செலுத்திய ஒவ்வொரு தவணைப் பணத்திற்கும் ரூபா 30 வீதம் காப்புறுதி கட்டணமும் விவசாயிகளுக்கு மீளச் செலுத்திய பணத்தில் ரூபா 150 இனை மீள காப்புறுதி கட்டணமாகவும் கழித்து விவசாயிகளுக்கு மீளச் செலுத்துகின்ற பணம் தீர்மானிக்கப்பட்டிருந்தும் இதற்காக எந்த சட்ட விதியும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | மூலம் பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் அதற்கிணங்க ஒவ்வொரு திட்டத்திற்குமிடையே செலவுகள் பகிரப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2007 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வூதியத் திட்டத்தில் காணப்பட்ட கூட்டு ஆயுள் காப்புறுதி நிதியத்திற்குரிய முதலீடாகிய ரூபா 251,547,146 மீதி கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. திட்டத்தின் நிதித் தேவைப்பாட்டிற்காக 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது கூட்டு ஆயுள் காப்புறுதி நிதியத்திலிருந்து ரூபா 295,230,442 கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக 2024 ஆம் ஆண்டு வரையான திரண்ட வட்டி ரூபா 469,030,456 ஆகும். மீளாய்வாண்டில் திட்டத்தின் நிருவாகச் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து பெற்ற ரூபா 249,630,000 பணத்தில் ரூபா 12,596,498 தொகையினை ஈடுபடுத்தி கடன் தொகையில் ஒரு பகுதி தீர்த்துவைக்கப்பட்டிருந்தது.<br>இதற்கிணங்க ஆயுள் காப்புறுதி நிதியத்தின் முதலீடு கடனாக மாற்றப்பட்டிருந்தது. | விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் மரண மற்றும் பலவீன பிரதிபலன் கொடுப்பனவிற்காக ஒரு காப்புறுதித் திட்டம் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் அமுல்ப்படுத்தப்படுவதுடன் அதனை பின்னர் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையினால் அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டின் போது விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக நிதி அமைச்சின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் இந்த நிதியத்தின் நிதி ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அப்பணத்தை விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திடமிருந்து மீள அறவீடு செய்யும் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதுடன் அக்கடனை படிப்படியாகத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவைப்பாட்டினை ஆராய்ந்து பார்த்து அதற்கிணங்க நிதியை வழங்க வேண்டியதுடன் பொருளாதார ரீதியான நலனை வழங்கும் வகையில் சரியான திர்மானம் எடுத்தல் வேண்டும். |
| (இ) | மாவில் ஆறு மதகினை மூடியதனால் விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கை இழப்பீட்டினை செலுத்துவதற்காக ரூபா 7 மில்லியனுக்கு மேற்பட்ட பணம் முன்னைய ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் இது சம்பந்தமாக கோவை செய்யப்பட்ட வழக்கு சட்ட மா அதிபதியின் அறிவுறுத்தல்களுக்காக 2007 | இந்த வழக்கின நடவடிக்கைகள் புலனாய்வுத் திணைக்கத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் உரிய வழக்கு தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் விடயங்களை விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும். | கோவை செய்யப்பட்ட வழக்கு சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நவம்பர் 30 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் எந்த பின்தொடர் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2007 இலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை செலுத்தப்படாத விவசாயிகள் ஓய்வூதியம் நிதிக்கூற்றுக்கில் ஒரு பொறுப்பாகக் காட்டப்படாது விவசாயிகள் ஓய்வூதிய செலவுக்கு எதிராக பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா 1,136,598,066 ஆக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் செலுத்தப்படாத ஓய்வூதியப் பொறுப்பு ரூபா 340,373,793 தொகையும் 2024 ஆம் ஆண்டில் செலுத்தப்படாத ஓய்வூதியப் பொறுப்பு ரூபா 568,503,026 தொகையும் பங்களிப்பாளர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஓய்வூதியத்தினை ஓய்வூதியக்காரர்கள் பெற்றுக்கொள்ளவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொண்டு அப்பணத்தை மீண்டும் பொதுத் திறைசேரிக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகள் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய மாதத்திலேயே தபால் அலுவலகங்களுக்கு வருகை தராதிருந்தும் அதற்கு பின்னைய மாதங்களில் உரிய உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு வருகை தருகின்ற சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. விவசாயிகள் அப்பணத்தை வேண்டிக்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் மீண்டும் வழங்குதல் வேண்டும். எனவே இப்பெறுமதி சபையின் நிதியில் நிறுத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விவசாயிகள் உரிமை கோராத ஓய்வூதியத்தினை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களைச் செலுத்த தவறி இருக்கையில் அது பற்றி தெரியப்படுத்தி உறுதியினை செயற்படச் செய்வதற்கு தேவையான வசதிகள் வழங்காததனால் நிர்ணயிக்கப்பட்ட வயதினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் ஓய்வூதியத்திற்காக 2021 ஆம் ஆண்டின் போது விண்ணப்பித்த 1,127 பங்களிப்பாளர்களுக்கும் 2022 ஆம் ஆண்டின் போது 2,226 பங்களிப்பாளர்களுக்கும் 2023 ஆம் ஆண்டில் 715 நபர்களுக்கும் 2024 ஆம் ஆண்டின் போது 775 பங்களிப்பாளர்களுக்கும் ஓய்வூதியம் செலுத்தப்படாது தேறிய தவணைப் பணத்தை செலுத்துதல் இடம் பெற்றிருந்தது. | அதிகாரச் சட்டத்தின் 15(1) ஆம் பந்தியின் பிரகாரம் முறையாக ஐந்து தவணைப் பணங்களைச் செலுத்த தவறிய எவரேனும் ஒரு பங்களிப்பாளருக்கு அவருக்கு வழங்கப்பட்ட சான்றிதழின் கீழ் பிரதிபலன்கள் இழக்கச் செய்யப்படுதல் வேண்டும். மேலும் ஒரு பங்களிப்பாருக்கு வழங்கப்படுகின்ற தவணைப் பண குறிப்பு புத்தகத்தின் அறிவுறுத்தல் இலக்கம் 04 இன் கீழ் 05 தவணைப் பணங்களைச் செலுத்த தவறினால் இத்திட்டத்தின் பிரதிபலன்களை அவர் இழப்பதுடன் உடன்படிக்கையும் செல்லுபடியற்றதாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பங்களிப்பாளர்கள் செலுத்த வேண்டிய தவணைப் பணங்களின் எண்ணிக்கையில் 75 சதவீத்திற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளை | தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களைச் செலுத்த தவறுகையில் அது பற்றி தெரியப்படுத்தி உறுதியை செயற்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொண்ட விவசாயிகளுக்கு கழிக்கப்பட்ட ஓய்வூதியமும் அவ்வாறு கொடுப்பனவுகளை மேற்கொள்ளாத விவசாயிகளுக்கு சபையினால் தேறிய தவணைப் பண கொடுப்பனவும் மேற்கொள்ளப்படுகின்றது.<br>அதற்கிணங்க அந்த விவசாயிகளுக்கு தேறிய தவணைப்பண கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதிய உரிமைக்காக 7,057 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 1,575 விண்ணப்பங்களுக்கு பிரதிபலன்களை வழங்குவதற்கு திட்டத்திற்கு முடியாதிருந்தது. | மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு மத்தியில் கணக்காய்வு ஐய வினாவில் காட்டியுள்ள விவசாயிகளின் ஓய்வூதிய விண்ணப்பங்களில் குறைபாடு காணப்பட்டமையால் உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்படாததுடன் அக்குறைபாடுகளை சரிசெய்து மீள அனுப்புமாறு மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் குறைபாடுகளை சரிசெய்து மீள அனுப்பியதன் பின்னர் அந்த விவசாயிகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் தற்பொழுது கொடுப்பனவு செய்ய வேண்டியுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 321 ஆகும். | ஓய்வூதிய பிரதிபலன்களை தாமதமின்றி கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் புதிய ஆட்சேர்ப்புக்களை ஆரம்பித்ததன் பின்னர் 2025 சனவரி 09 ஆந் திகதி வரை ஒரே தடவையில் பணத்தை செலுத்திய 1,205 பங்களிப்பாளர்களும் அரையாண்டு தவணைப் பணங்களைச் செலுத்திய 2,210 பங்களிப்பாளர்களுக்கு மாதாந்த தவணைப் பணத்தை செலுத்திய 1,477 பங்களிப்பாளர்களும் திட்டத்தில் பங்களிப்பினைப் பெற்றிருந்த துடன் அந்த அந்த பங்களிப்பாளர்களுக்கு இணங்க பங்களிப்பு பணத்தை அறவீடு செய்தலினை அடையாளங்காண்பதற்கும் பங்களிப்பாளர்கள் செயற்படுபவர்கள் அல்லது செயற்பாடற்றவர்கள் என்பது பற்றி அடையாளங்காண்பதற்கும் செயற்பாடற்ற பங்களிப்பார்களின் பங்களிப்பு பணத்தை | விவசாயிகளால் தவணைப் பணத்தை செலுத:தும் போது வங்கிக்கான நிலையான கட்டளைகளின் மூலம் மற்றும் Bill Payment முறைமைக்கு இணங்க பின்னைய தவணைப்பண கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதுடன் தவணைப் பண கொடுப்பனவினை மேற்கொள்ளுகின்ற விவசாயிகளின் தனித்தனி கணக்குகளை நாளதுவரையாக்குவதற்காக Excel மென்பொருளினை ஈடுபடுத்தி தரவு முறைமையினை நாளாந்தம் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் மக்கள் வங்கியின் மூலம் சரியாக உறுதி இலக்கத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வங்கியினால் முறைமை நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் தவணைப் பணம் நாளாந்தம் பங்களிப்பாளர்களின் தனித்தனி கணக்குகளில் | தவணைப் பணத்தினை நிர்ணயிக்கப்பட்டவாறு அனுப்பிவைக்காதவர் கள் மற்றும் உறுதியினை மீறுகின்றவர்களை அடையாளம் காண்பதற்கு நடைமுறை அறிமுகப்படுத்தப்படுத ல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பேற்காதிருப்பதற்கும் முடியுமான வகையில் காணப்படுகின்ற தகவல் முறைமை அல்லது கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை. | நாளதுவரையாக்கப்படும். விவசாயிகளுக்கு உரிய தெரியப்படுத்தல் நடவடிக்கையானது ஓய்வூதியப் பிரிவினால் மேற்கொளளப்படும். | |
| (ஈ) | 2012 ஆம் ஆண்டிற்கு முனனர் சேர்த்துக்கொள்ளப்பட்ட பங்களிப்பாளர்களின் தகவல்கள் பேணப்பட்ட தகவல் முறைமைக்கு உள்ளடக்காமை மற்றும் அவர்களின் பணம் அனுப்புதல்களுக்காக பற்றுச்சீட்டுக்கள், தவணைப் பண கொடுப்பனவு விபரங்கள் என்பன பாதுகாப்பாக பேணப்படாமையின் காரணமாக வருமானங்களின் பூரணத்துவம் மற்றும் சரியான தன்மை என்பன பணம் அனுப்புதல்களின் கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. | உரிய அறிக்கைகள் முறைப்படியாக கோவை செய்யப்பட்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது தவணைப் பண குறிப்பு புத்தகத்தில் நாளதுவரையான தரவுகளைப் பயன்படுத்தி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் புதிய திட்டத்தின் கீழ் தவணைப் பண கொடுப்பனவுகளை நாளதுவரையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் சேர்த்துக் கொள்ளப்பட்ட பங்களிப்பாளர்களின் தகவல்கள் மற்றும் பணம் அனுப்புதல்களை காணப்படுகின்ற தகவல் முறைமைக்கு உள்ளடக்கி நாளதுவரையாக்குதல் வேண்டும். |
| (உ) | 2008 ஆம் ஆண்டின் போது விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு புதிய பங்களிப்பாளர்களைச் சேர்த்துக்கொள்ளலினை நிறுத்துதல் மற்றும் 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் விவசாயிகளுக்கான ஓய்வூதியம் கொடுக்கப்படாமையால் திட்டம் தொடர்பாக விவசாயிகளிடம் இருந்த நம்பிக்கை இழக்கப்பட்டதன் காரணமாக விவசாயிகளால் பங்களிப்பு பணத்தை செலுத்துதல் நிறுத்தபபட்டதனால் தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களைச் செலுத்த தவறியுள்ள 918 விவசாயிகளுக்கு 528/03 மற்றும் 543/01 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் விசேட பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்டையில் ஓய்வூதியத்தினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் ஓய்வூதியத்தினை கணிப்பீடு செய்யும் போது செலுத்த வேண்டிய முழுத் தவணைப் பணத்தின் அளவினையும் செலுத்தியுள்ள ஏனைய விவசாயிகள் ஓய்வூதியத்தினை இழக்காமைக்கும் கழிக்கப்பட்ட ஓய்வூதியம் | கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட தவணைப் பணத்தில் 75 சதவீதத்தினை செலுத்தி முடிவுறுத்தியுள்ள போதிலும் முறைைப்படியாக 05 தவணைப் பணங்களைச் செலுத்த தவறியதனால் பங்களிப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ள பங்களிப்பாளர்களுக்கும் ஓய்வூதியத்தினை வழங்குவதற்கு நிவாரணத்தினை வழங்குவதற்காக 2025-03-24 ஆந் திகதி நடைபெற்ற 546 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனை ஆலோசனைக் குழுவிற்குக் சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்படும். | அனைத்து தவணைப் பணங்களையும் செலுத்திய பங்களிப்பாளர்களுக்கு ஓய்வூதியத்தினை வழங்கும் போது உரிய உரிமைகள் இழக்கப்படாத வகையில் பொது இணக்கப்பாட்டினை ஏற்படுத்தி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்படாமைக்கும் பொது இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்படாமையால் அனைத்து தவணைப் பணங்களையும் செலுத்திய போதிலும் சபையின் கணிப்பீட்டின் பிரகாரம் தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களைச் செலுத்த தவறியுள்ள ஏனைய விவசாயிகளுக்கு ஓய்வூதியம் இல்லாமல் ஆக்கப்பட்டு கழிக்கப்பட்ட ஓய்வூதியம் தயாரிக்கப்பட்டு இருந்தது. | | |
| (ஊ) | பங்களிப்பாளர்களால் செலுத்த வேண்டிய தவணைப் பணத்தின் அளவு அல்லது அந்த அளவினை மிகைத்து தவணைப் பணத்தினை செலுத்தியிருந்த போதிலும் இறுதித் தவணைப் பணத்தினை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செலுத்தியிருக்காமையால் பரீட்சிக்கப்பட்ட 20 விவசாயிகளுக்கு மத்தியில் 03 விவசாயிகளுக்கு கழிக்கப்பட்ட ஓய்வூதியத்தினைச் செலுத்துவதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. இறுதித் தவணைப் பணத்தினை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செலுத்தாமையின் காரணமாக கழிக்கப்பட்ட ஓய்வூதியதிற்கு தகமை பெறப்படுகின்றது என பணத்தினைப் பொறுப்பேற்கும் உத்தியோகத்தர் தெரிவித்திருக்கவில்லை. அவ்வாறே இறுதித் தவணைப் பணத்தினைச் செலுத்த வேண்டிய திகதி கடந்ததன் காரணமாக பங்களிப்பாளர்களின் பெயர்ப்பட்டியல் பணத்தினை அறவீடு செய்யும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | இறுதித் தவணைப் பணத்தினை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செலுத்தியிருக்காத விவசாயிகளுக்கு சலுகைக் காலத்தின் கீழ் கொடுப்பனவு செய்கின்ற தவணைப் பணத்தின் அளவினை செல்லுபடியாகும் தவணைப் பணமாகக் கருதி கொடுப்பனவினை மேற்கொள்வதற்குத் தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பங்களிப்பாளரினால் செலுத்த வேண்டிய தவணைப் பணத்தின் அளவு அல்லது அந்த அளவினை மிகைத்து தவணைப் பணம் அறவிடப்படாத ஒரு உள்ளகக் கட்டுபாட்டு நடைமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | விவசாயி ஓய்வூதியக்காரர் மரணமடைந்துள்ளார் என அடையாளம் காண்பதற்காக தபால் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்ற தகவல்களைத் தவிர மரணமடைந்துள்ளார் என்பதனை நிரந்தரமாக உறுதிப்படுத்தும் ஒரு நடைமுறை நிதியத்திடம் இல்லாததுடன் அலவ்வாறு மரணமடைந்தமை | விவசாயி ஓய்வூதியக்காரர்களுக்கு விவசாயி ஓய்வூதியக் கொடுப்பனவு தபால் அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் உரிய கொடுப்பனவை நிறுத்துவதற்கு தபால் நிலைய பொறுப்பாளரின் சிபாரிசு தொடர்பாக கவனித்துப் பார்க்கின்ற அதேவேளை உரிய பங்களிப்பாளர் ஓய்வூதியத்தினை 06 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் | ஓய்வூதியத்திற்கு தகமையுள்ள நபரின் ஆயுள் தரவு தகவல்களின் மூலம் உறுதிப்படுத்தி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் |

| | | | |
|---|---|---|---|
| | பற்றி அறிக்கையிடப்பட்ட ஓய்வூதியக்காரரின் பெயர் உரிய கொடுப்பனவு ஆவணங்களிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டிலிருந்து 2025 ஆம் ஆண்டு வரை அவ்வாறு நீக்கப்பட்ட ஓய்வூதியக்காரர்களின் எண்ணிக்கை 21,937 ஆகும். | பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லையாயின் மேற்கூறிய சிபாரிசினை கவனித்துக் பார்த்து உரிய கொடுப்பனவை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுப்பனவுகள் ஆவணங்களிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். |
| (ஏ) | விவசாயிகள் ஓய்வூதியத்திட்டத்திற்காக பங்களிப்பாளர்களைச் சேர்த்துக்கொள்ளல் என்ற தலைப்பில் 2022 ஒக்தோபர் 26 அந் திகதிய 01/2022 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் தலைவரினால் வழங்கப்பட்ட உள்ளக சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற ஒவ்வொரு பங்களிப்பாளருக்கும் சான்றிதழ் உறுதி வழங்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிலிருந்து 2025 ஆம் ஆண்டின் யூன் மாதம் வரை பங்களிப்பினைப் பெற்றுக்கொண்ட 6,285 பங்களிப்பாளர்களுக்கு மத்தியில் 848 பங்களிப்பாளர்களுக்கு பங்களிப்பு உறுதி வழங்கப்படவில்லை. | விவசாயிகள் ஓய்வூதிய முறைமைக்கு தகவல்களை உள்ளடக்குவதற்கு உரிய பயிற்சியும் அறிவுறுத்தல்களும் மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க சரியான தகவல்களை வழங்கியுள்ள பங்களிப்பாளர்களின் உறுதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பங்களிப்பாளர்களால் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்காத சந்தர்ப்பங்களில் உறுதிகள் வழங்கப்படாததுடன் அவ்வாறான பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்தி உரிய ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் உறுதியை வழங்குவதில் தாமதம் இல்லை என சுட்டிக்காட்டுகிறேன். | ஓய்வூதிய திட்டத்தின் அனைத்து பங்களிப்பாளர்களுக்கும் சான்றிதழ் உறுதியினை தாமதமின்றி வழங்குதல் வேண்டும். |
| (ஐ) | 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி அதிகாரச்சட்டத்தின் 33(ஈ) பிரிவின் பிரகாரம் கமத்தொழில் காப்புறுதிச் சபையினால் அமைச்சரினை விசாரித்து இத்திட்டத்தினை செயற்படுத்த வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையினால் அந்த நடவடிக்கைக்காக ரூபா 253,136,873 பணம் விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் வருமானத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தினை அமுல்ப்படுத்தும் போது பொதுத் திறைசேரியிடமிருந்து ரூபா 249 மில்லியன் பணம் மற்றும் ஏனைய வருமானமாக ரூபா 1 மில்லியன் மற்றும் விவசாயிகள் ஓய்வூதியத்திற்காக ரூபா 2 மில்லியன் விவசாயிகளின் பங்களிப்பும் இந்த வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என சுட்டிக் காட்டுகிறேன். | அதிகாரச் சட்டத்தினை அமுல்ப்படுத்:துதல் சபையின் ஒரு செயற்பாடு என்பதனால் அதற்காக தனியான நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்யாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | 60 வயது பூர்த்தியடையும் சந்தர்ப்பத்தில் ஓய்வூதியத்தினை வேண்டிக்கொள்வதற்கு உரிய விண்ணப்பங்கள் விவசாயினாலேயே தமது சான்றிதழ் உறுதியினைப் பரீட்சித்து உரிய காலத்திற்குள் சபைக்கு கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டுமென விவசாயிகளுக்கு தெரியப்படுத்தியிருக்காததுடன் விவசாயி பங்களிப்பாளரினால் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு தாமதமடையுமாயின் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களுடன் தாமதத்திற்கான காரணத்தை குறிப்பிட்டு ஒரு கடிதம் விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கட்டிருந்தது. அவ்வாறே 60 வயது பூர்த்தியடைந்த போதிலும் 2024 திசெம்பர் 31 இல் உ்ளவாறு ஓய்வூதியம் கிடைக்காதவர்களின் எண்ணிக்கை சரியாக அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்க்கும் போது திட்டத்திற்கு பங்களிப்பினை வழங்குகின்ற முறைமை மற்றும் பிரதிபலன்களை பெற்றுக்கொள்ளும் முறைமை தொடர்பாக விவசாயிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டது. சபையினால் விவசாயிகளுக்கு சான்றிதழ் உறுதி வழங்கப்பட்டுள்ளதுடன் விவசாயிகள் பிரதிபலன்களுக்கு தகமை பெறும் காலப்பகுதி அதில் காட்டப்பட்டுள்ளது. 60 வயது பூர்த்தியடைந்துள்ள விவசாயிகளுக்கு ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக தெரியப்படுத்தி கடிதத்தினை அனுப்புதல் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. இதற்கிணஙக 60 வயது பூர்த்தியாகியுள்ள உடனே விவசாயிகளுக்கு ஓய்வூதியத்தினைச் செலுத்துவதற்குரிய நடவடிக்கை தற்பொழுது எடுக்கப்பட்டுள்ளது. | 60 வயது பூர்த்தியாகிய சந்தர்ப்பத்தில் விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஓ) | திட்டத்தின் நிருவாகம், முகாமைத்துவம், செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குரிய விடயங்கள் தொடர்பாக சபைக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழு திட்டத்தின் குறிக்கோள்களை ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்காக 2016 ஆம் ஆண்டில் கூட்டப்பட்டதன் பின்னர் 2022 ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களின் போது 2023 ஆம் ஆண்டில் ஒரு சந்தர்ப்பத்தின் போது மற்றும் 2024 ஆம் ஆண்டில் ஒரு சந்தர்ப்பத்தின் போதும் கூட்டப்பட்டதனைத் தவிர்த்து உரிய காலங்களில் கூட்டப்பட்டிருக்கவில்லை. குழு கூட்டங்களை நடாத்துவது தொடர்பாக வரையறைகளை உள்ளடக்கிய குழுக் கூட்டங்கள் ஒழுங்குமுறையாக நடாத்தப்பட்டதா என்பதனை மீளாய்வு செய்ய முடியாதிருந்தது. | விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் மூலம் ஆலோசனைக் குழுக்களை நடாத்துவது தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க சபையினால் தேவையான சந்தர்ப்பங்களின் போது ஆலோசனைக் குழு கூட்டப்பட்டு சபை தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். | திட்டத்தின் குறிக்கோள்களை ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்காக குழு காலரீதியாக கூட்டப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | 2021 ஆம் ஆண்டில் புதிய ஆட்சேர்பபுக்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் 2025 யூன் 20 ஆந் திகதி வரை விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திற்கு 6,285 விவசாயிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் முறைமைக்கு தகவல்களை உள்ளடக்குவது தொடர்பாக முறைப்படியாக மேற்பார்வை செய்யப்படாமையால் தேசிய அடையாள அட்டை இலக்கம், வயது, தவணைப் பணத்தின் பெறுமதி, தவணைப் பணம் செலுத்தி முடிவடைந்த திகதி, பங்களிப்பாளரின் வங்கி கணக்கு இலக்கம், வங்கி கிளை, ஓய்வூதியத்திற்கு தகமை பெறும் திகதி என்பவைகள் உள்ளடக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | இந்நிலைமையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என தெரிவிக்கிறேன். ERP முறைமையினூடாக ஓய்வூதிய நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் வரை அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு தற்காலிக தரவு முறைமையானது புதிய ஓய்வூதியத் திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும். அடிப்படைத் தரவுகள் மாவட்ட அலுவலகங்களினால் உள்ளடக்கப்பட்டிருந்தும் உறுதிகளை வழங்குவதற்கு முன்னர் தலைமை அலுவலகத்தின் மூலம் தகவல்களின் சரியான தன்மை பரீட்சிக்கப்படும். அதன் போது தேசிய அடையா அட்டை இலக்கம், வயது, தவணைப் பணம், அதற்குரிய திகதி என்பன பரீட்சிக்கப்படும். | தகவல் முறைமைக்கு தகவல்களை சரியாக உள்ளடக்கி நாளதுவரையாக்குதல் வேண்டும். |